C

# முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

## விலங்கியல்

நேரம் 3.00 மணி | மதிப்பெண்கள் 70

பகுதி - I

15 x 1 = 15

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. வேறுபாடுகள் எவ்வகை இனப்பெருக்கத்தில் தோன்றும்?
   அ) பாலிலி இனப்பெருக்கம் ஆ) கன்னி இனப்பெருக்கம்
   இ) பாலின பெருக்கம் ஈ) அ மற்றும் ஆ இரண்டும்
2. பெண்ணின் சுமரி ஆணின் எவ்வுறுப்புக்கு ஒப்பானது?
   அ) விதைப்பை ஆ) ஆண்குறி இ) சிறுநீர் வடிகுழல் ஈ) விந்தகம்
3. கீழ் உள்ள குழுக்களுள் பாக்டீரிய பால்வினை நோய் குழுவை குறிப்பிடு.
   அ) கிரந்தி, வெட்டை நோய், கேன்டிடியாஸிஸ்
   ஆ) கிரந்தி, வெட்டை நோய், கிளாமிடியாஸிஸ்
   இ) கிரந்தி, கொனோரியா, டிரைகோமோயாஸிஸ்
   ஈ) கிரந்தி, பெடிகுளோஸிஸ், டிரைகோமோனியாஸிஸ்
4. கிளைன் ஃபெல்டர் சின்ட்ரோம் குரோமோசோம் தொகுப்பு வரைபடம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.
   அ) xxy ஆ) xo இ) xxy ஈ) xxx
5. மெசல்சன் மற்றும் ஸ்டால் சோதனை நிருபிப்பது
   அ) கடத்தி வகை மாற்றம்
   ஆ) தோற்ற மாற்றம்
   இ) டி.என்.ஏ ஒரு மரபு பொருள்
   ஈ) பாதி பழையன காத்தல் மறை டி.என்.ஏ இரட்டிப்பாதல்
6. டார்வினின் கருவிகள் கீழ்க்கண்ட எதற்கு எ.கா. ஆகும்.
   அ) இணைப்பு உயிரிகள் ஆ) பருவ கால வலசைபோதல்
   ஆ) தகவமைப்பு பரவல் ஈ) ஒட்டுண்ணி வாழ்க்கை முறை
7. நவீன மனித இனம் எந்த காலத்தை சேர்ந்தது?
   அ) குவார்டெர்னரி ஆ) கிரட்டேஷியஸ் இ) சைலூரியன் ஈ) கேம்ப்ரியன்
8. கீழ்க்கண்ட எந்த நோய் நீர்த்திவரைகள் மூலம் பரவுகிறத?
   அ) பிளேக் ஆ) டைஃபாய்டு இ) சின்னம்மை ஈ) டெங்கு காய்ச்சல்
9. டாடுரா தாவரத்திலிருந்து உருவாக்கப்படும் போதை மருந்து
   அ) மனமருட்சியை ஏற்படுத்துபவை ஆ) சோர்வூட்டி
   இ) கிளர்வூட்டி ஈ) வலி நீக்கி
10. B -செல்களை தூண்டுவது எது?
    அ) நிரப்பு கூறுகள் ஆ) எதிர்பொருள் இ) இன்டர்பெரான் ஈ) எதிர்பொருள் தூண்டி
11. கழிவு நீரை உயிரிய சுத்திகரிப்பு செய்வதன் நோக்கம்
    அ) உயிரிய ஆக்சிஜன் தேவையை குறைத்தல்
    ஆ) உயிரிய ஆக்சிஜன் தேவையை அதிகரித்தல்
    இ) படிவாதலை குறைத்தல்
    ஈ) படிவாதலை அதிகரித்தல்
12. GEAC என்பதன் விரிவாக்கம்
    அ) ஜீனோம் பொயியியல் செயல் குழுமம் ஆ) நில சுற்றுச்சூழல் செயல் குழுமம்
    இ) மரபு பொறியியல் ஒப்புதல் குழுமம் ஈ) மரபிய மற்றும் சுற்றுச்சூழல் ஒப்புதல் குழுமம்
13. கீழ்க்கண்டவற்றுள் $\gamma$-சிற்றினத்துக்கு உதாரணம்
    அ) மனிதன் ஆ) பூச்சிகள் இ)காண்டாமிருகம் ஈ) திமிங்கலம்

Scanned with CamScanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



14. உயிரினங்களின் சிவப்பு பட்டியலை வெளியீட்டுள்ள நிறுவம்
அ) WWF ஆ) IUCN இ) ZSI ஈ) UNEP

15. ஸ்ட்ரேட்மேஸ்பியரின் ஓசோன் அடுக்கின் தடிமனை அளவிட பயன்படுவது எது?
அ) ஸ்வர்ட்ஸ் அலகு ஆ) டாப்லின் அலகு
இ) மெல்சன் அலகு ஈ) பீ்ஃபோர்ட் அளவுகோல்

## பகுதி - II 6 x 2 = 12

குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 24க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

16. சீம்பால் என்றால் என்ன?
17. தாய் சேய் இணைப்புத்திசு ஒரு நாளமில்லா சுரப்பிதிசு - நியாயப்படுத்து.
18. ஹன்டிங்டன் கோரியா என்றால் என்ன?
19. முதன்மை இழை மற்றும் பின் தங்கும் இழை வேறுபடுத்துக.
20. உயிரினங்கள் தகுதி நிலையை டார்வின் எவ்வாறு விளக்குகிறார்.
21. மரபணு மாற்றப்பட்ட விலங்குகள் என்பன யாவை? எ.கா. தருக.
22. மண்ணின் தோற்றம் என்றால் என்ன?
23. ஓரிடத்தன்மை வரையறு
24. உரம் கலந்த நீர் வழிந்தோடி நீர் நிலையில் கலப்பதால் நீர் சூழ்நிலை மண்டலத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் யாவை?

## பகுதி - III 6 x 3 = 18

குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
ஆ) வினா எண் 33க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

25. இழப்பு மீட்டல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
26. பனிக்குட துளைப்பு என்பது யாது? இத்தொழில் நுட்பத்திற்கு சட்டப்படியான தடை விதிப்பது ஏன்?
27. ஒற்றை மய - இரட்டை மய நிலை என்றால் என்ன?
28. அமைப்பு மரபணுக்கள், நெறிபடுத்தும் மரபணுக்கள் மற்றும் இயக்கி மரபணுக்களை வேறுபடுத்துக.
29. அமைப்பொத்த உறுப்புகள், செயலொத்த உறுப்புகள் வேறுபடுத்து.
30. போதை மருந்துகள் மற்றும் மதுப்பழக்கத்திலிருந்து விலகும் போது ஏற்படும் விலகல் அறிகுறிகள் மூன்றினை வரிசைபடுத்து.
31. உயிர் எதிர்ப்பொருள் எதிர்ப்பு திறன் எப்பொழுது உருவாகிறது.
32. டி.என்.ஏ. தடுப்பூசிகள் என்பன யாவை?
33. வெப்பமண்டல பகுதிகளில் உயிரிய பல்வகை தன்மையின் செழுமைக்கான காரணங்கள் மூன்றினை கூறு.

## பகுதி - IV 5 x 5 = 25

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

34. அ) பல்வேறு மாதவிடாய் குறைபாடுகளை பட்டியலிடுக. (அல்லது)
ஆ) இன மேம்பாட்டியலின் முறைகள் பற்றி எழுதுக.
35. அ) டி.என்.ஏ ரேகை அச்சிடலின் பயன்பாடுகளை எழுதுக. (அல்லது)
ஆ) டார்வினியக் கோட்பாடுகளுக்கான முக்கிய எதிர்கருத்துக்கள் யாவை?
36. அ) மனித வைரஸ் நோய்கள் ஐந்தினை அட்டவணைப்படுத்து (அல்லது)
ஆ) இம்யுனோகுளோபுலின் அமைப்பை தகுந்த படத்துடன் விளக்கு.
37. அ) நகலாக்கத்தின் சாதக, பாதகங்களை குறிப்பிடுக. (அல்லது)
ஆ) இரு வேறு சிற்றின விலங்குகளுக்கிடையேயான சார்புகளை அட்டவணைப்படுத்துக.
38. அ) உயிரிய பல்வகைத்தன்மை இழப்பிற்கான பல்வேறு காரணங்களை பட்டியலிடுக. (அல்லது)
ஆ) கதிரியக்க கழிவுகளை அகற்றும் முறைகளை விளக்குக.

--------------------

Scanned with CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com